பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தி, அவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்திட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசை தலைமையேற்று வழிநடத்துகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணார் அவர்களும் ஆவன செய்திட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கமும் அதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தத் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ, அவற்றை ஒருங்கிணைத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற மாணவர்கள் விடுமுறை நாட்களில் அத்தொழிற்சாலைகளுக்குச் சென்று பயிற்சிகள் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல்,* Leather Technology, Designing, Hospital Management *போன்ற பல்வேறு தொழில் பாடப் பிரிவுகளை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், மாணவர்கள் விடுமுறை நாட்களில் விரும்பினால், அந்தந்தப் பகுதியில் இருக்கிற பெரிய தொழிற்சாலைகளுடன் ஒருங்கிணைந்து, அந்தப் பணிகளை மேற்கொள்வதன் மூலமாக அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும். அதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

143—

கருணைத் தொகை

***25790—திரு. வாகை சந்திரசேகர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2018 ஜூன் 7]

போரில் உயிர் நீத்தோருக்கான மனைவியருக்கு வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.50,000/-ஐ உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தங்களது குடும்பத்தினரைப் பிரிந்து, மகிழ்ச்சியைத் துறந்து, இந்திய தாய்த் திருநாட்டின் குடிமக்களை அந்நிய தேசத்திடமிருந்தும், தீவிரவாதிகளிடமிருந்தும் காக்கும்பொருட்டு, தங்கள் இன்னுயிரை துச்சமென மதிக்கும் முப்படையினரின் நலனில் பெரும் அக்கறை கொண்டு, அவர்களின் வாழ்வு செழிக்கும்வகையில் பல அரிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் தாய் நாடு காக்கும் பணியில் உயிர் நீத்த படைவீரரைச் சார்ந்தோரின் பெற்றோர், திருமணமான படைவீரராயிருப்பின், அவரது மனைவியருக்கு தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் கருணைத் தொகையை ரூ.50,000/-லிருந்து ரூ.1,00,000/-ஆக உயர்த்தியதோடு, கார்கில் நிதியிலிருந்து கருணைத் தொகையாக 20 இலட்சம் ரூபாய் வழங்க 2-9-2016 அன்று அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் பல்வேறு மொழிகள் பேசி, பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் மண்ணின் மைந்தர்களாக அவரவர் தனித்தன்மையில் வாழ்ந்தாலும், இந்தியாவிற்கு ஒரு ஆபத்து வருகிறபோது, நான் ஓர் இந்தியன் என்று அனைவரும் கைகோர்த்து நிற்கிறோம். இந்தியத் திருநாட்டிற்கு பூமிப் பந்தில் எங்கிருந்து ஆபத்து வந்தாலும், அதைத் தகர்த்து, தன் உயிரைத் தியாகம் செய்கிறான் இராணுவ வீரன். அந்த வீரனின் மனைவி விதவையாகிறாள். அந்தச் சகோதரியின் வாழ்வு பொருளாதாரத்தில் உயர வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கேள்வி.*

முற்பகல் 10-20

இந்தியாவில் முன்னாள் இராணுவ வீரர்கள் மொத்தம் 25 இலட்சம் பேர். இந்திய இராணுவத் துறையால் பதிவு செய்யப்பட்ட முன்னாள் இராணுவ வீரர்கள் 15 இலட்சத்து 67 ஆயிரத்து 390 பேர். அதில் 1 இலட்சத்து 3 ஆயிரத்து 156 பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அதில் விதவைகள் தமிழ்நாட்டில் 65 ஆயிரம் பேர் இருக்கின்றார்கள். இது Indian Armed Forces Page-*லிருந்து எடுக்கப்பட்ட புள்ளிவிவரம். இதுவரை இந்த விதவைப் பெண்களுக்கு அளித்துவரும் உதவிகளை தமிழ்நாடு அரசு மேலும் சிறப்புடன் தொடர்ந்திட வேண்டும். குறிப்பாக, இராணுவத்தில் பணியாற்றும்போதோ, ஓய்வுபெற்ற பின்பு கணவனின் மறைவுக்குப் பிறகோ வாழும் விதவைப் பெண்களுக்கு 50 விழுக்காடு வழங்கும் உதவித் தொகையை 70 விழுக்காடு உதவித் தொகையாக அதிகரிக்க வேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமாக இருக்கிறது. தற்போது கணவனுக்கு 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை என்றால், அவரின் மறைவுக்குப் பிறகு, அவரின் மனைவிக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்குவதை 7 ஆயிரம் ரூபாயாக உயர்த்திட வேண்டும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத்தார். தற்போது இந்த படைவீரர் நலனில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிற முன்னாள் படை வீரர்களுடைய எண்ணிக்கை 1 இலட்சத்து 22 ஆயிரத்து 738 பேர். விதவைகளாக இங்கே கணக்கிடப்பட்டிருப்பவர்கள் 52 ஆயிரத்து 395 பேர் என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.*

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, அவர்களுக்கு உதவித் தொகையை அதிகப்படுத்தி, நிதியை ஒதுக்க வேண்டுமென்பது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது இந்த முப்படை வீரர்கள் நலனில் அக்கறைகொண்டு, மிக அற்புதமான செயல்திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் கொடிநாள் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

2018 ஜூன் 7]

அந்தக் கொடிநாள் வசூலில் ஆண்டுதோறும் நம் மாநிலம்தான் முன்னிலையில் இருக்கிறது. இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டியாக அதிகப்படியான நிதியை தமிழ்நாடு வசூலிக்கிறது என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இவர்களுடைய வாழ்க்கையில் வசந்தத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இன்றைக்கு முழுமையாக அவர்களுடைய நலனில் அக்கறைகொண்டு, அவர்கள் தொழில் புரிவதற்கும், படிப்பதற்கும், அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றத்தை உருவாக்குவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

பொதுவாக, விதவைகள் சுய தொழில் புரிவதற்கு வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வரை கடன் தொகை பெறுகிறார்கள் என்றால், 75 சதவிகிதமான வட்டி மானியத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செலுத்தி வருகிறது. அதேமாதிரி, 17 இலட்சம் ரூபாய் வரைக்கும் சுய உதவிக் குழுக்கள் வைத்திருக்கிறார்கள் என்றால், அதற்கு 100 சதவிகித வட்டி மானியத்தையும் அரசே வழங்குகிறது என்பதையும், இந்த முப்படை வீரர்களினுடைய நலன் காக்கின்ற நிதிக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 40 சதவிகித உதவித் தொகையை வழங்குகிறது. மாணவர்களுடைய பள்ளிப் படிப்புகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உதவி செய்து வருகிறது. அனைத்து வழிகளிலும் இன்றைக்கு இந்தியாவிலேயே முன்னோடியான திட்டங்களை தமிழ்நாடு அரசுதான் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டைக் காட்டிலும் பெரிய மாநிலங்களான மஹாராஷ்டிரா, ஆந்திரா, பக்கத்தில் இருக்கிற கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்கள் எல்லாம் மிக மிகக் குறைவான நிதியைத்தான் கொடுக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த கேள்விக்கு ஒரு சிறிய விளக்கத்தைத் தர விரும்புகிறேன். இன்றைக்கு வந்துள்ள இந்தக் கேள்வியுடன், இந்த அரசின் முதல் கூட்டத் தொடரின்போது, இராணுவம் சம்பந்தமாக 10 கேள்விகளை எழுதி அனுப்பினேன்.*

முதல் கூட்டத் தொடர் 21-7-2016-ல் தொடங்கியது எனக் கருதுகிறேன். 2016 ஜூன் மாதத்தில் வினாப் பட்டியலுக்கு நான் எழுதிய கேள்வி, 2018-ல் வருகிறது. 2016 ஜூன் மாதம் நான் கேள்வி அனுப்பும்போது விதவைப் பெண்ணுக்கு உதவித் தொகை 50 ஆயிரம் ரூபாயாகத்தான் இருந்தது. அதை 2-9-2016, செப்டம்பர் 2016-ல்தான் அரசு ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது. நான் கேள்வி கேட்டபொழுது 50 ஆயிரம் ரூபாய்தான். 2016-ல் எழுதி அனுப்பிய கேள்வி 2018-ல் வருகிறது. இந்தக் கேள்வி மாமன்றத்திற்கு வந்து சேர இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அப்படிப் பார்த்தால், இந்தக் கேள்விக்கே நீங்கள் பென்ஷன் தர வேண்டுமென்று நான் நினைக்கிறேன். எப்படியிருந்தாலும் என்னுடைய கேள்வி அவை நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருப்பதை நான் வரவேற்கிறேன். நம் தாய் மண்ணுக்காகப் போராடி உயிர்நீத்த இராணுவ வீரர்களின் குடும்ப விதவைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தியும், பல்வேறு சலுகைகளை வழங்கியும், தாய்நாட்டின் நெற்றித் திலகம் நிலையாய் விளங்கிட தங்கள் நெற்றித் திலகத்தைத் தியாகம் செய்கிற தாய்க்கும், சகோதரிக்கும் இந்த அரசு பாதுகாப்பாய் இருந்திட நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று இந்த அரசை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், நீங்கள் 19-6-2017 அன்றைக்குத்தான் இந்தக் கேள்வியைக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)இல்லை,இல்லை 2017-ல்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். 2016-ல் இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை இங்கே பாருங்கள். நீங்கள் கொடுத்தது என்னிடம் இருக்கிறது.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கிறது. நான் அதைக் காட்டுகிறேன்.

2018 ஜூன் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. நீங்கள் வைத்துக் கொண்டிருந்தால் அது* record *இல்லை. என்னிடம் இருப்பதுதான்* record *ஆகும்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 2016-ல் கொடுத்தது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களிடம் என்ன வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது பேச்சு இல்லை. என்னிடம் இருப்பதுதான்* official record. *இந்த* official record-*ல் நீங்கள் கொடுத்த தேதி 19-6-2017. ஆகவே, நீங்கள் அந்தத் தேதி குறித்து சொல்ல வேண்டாம்.*

திரு. வாகை சந்திரசேகர்: *நீங்கள் எடுத்த உறுதிமொழியை எடுத்துதான் நானும் சட்டமன்ற உறுப்பினராக இங்கு வந்திருக்கிறேன். அந்த தர்மம், அந்த நியாயத்தின்படி நானும் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை.* (குறுக்கீடு) *சரி.* Right, *விடுங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லிவிட்டீர்களா?* (குறுக்கீடு) *சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தவறான தகவலைச் சொல்கிறார். 13-7-2017 அன்றுதான் அவருடைய கேள்வி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய விடையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்தியாவிலேயே இருக்கிற எந்த ஒரு மாநிலத்தைக் காட்டிலும் அதிகமான கரிசனத்தோடு, அவர்களுடைய தியாகத்தை மதிக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அண்ணன் எடப்பாடியார் அரசும் இன்றைக்கு தேவையான உதவிகளை வழங்கி வருகிறது. இதை அதிகப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி, மாண்புமிகு உறுப்பினருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கேள்வி கேட்க வேண்டுமா?* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல, உயிரிழந்த இராணுவ வீரர் ஒருவரின் நிகழ்ச்சிக்கு நானும், அந்த மாவட்ட அமைச்சர் அவர்களும் போய்விட்டு வந்தோம். அங்கே அவருடைய மனைவிக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாகச் சொல்லப்பட்டது. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாகின்றன. அவரும் P.G., Teacher Training எல்லாம் படித்திருக்கிறார். இன்னும் அவருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவில்லை. அதைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை தயவு கூர்ந்து இந்த அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மூத்த உறுப்பினர். அவர் கேள்வி கேட்டிருக்கிறார். அவருடைய படிப்புத் தகுதி குறித்து விவரம் கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அரசு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

144—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***27822—திரு. எஸ். அம்பேத்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வழூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,